தேவனுக்கே மகிமை

# சிட்டுக்குருவி

இது பரலோகம் செல்ல வழிகாட்டும் குருவி


ஏப்ரல் 2022 | மாத இதழ் | குருவி 4-11

மாத அன்பளிப்பு ₹ 10
வருட அன்பளிப்பு ₹ 120


*அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது.*

*(வெளிப்படுத்தல் 13:17)*




# மிருகத்தின் முத்திரை

# சாத்தானுடைய சதித்திட்டம்

(பகுதி 47)

**இந்தப் பகுதி புரிதலுக்காக சாத்தானுக்கும், அவனுடைய தீய தூதனுக்கும், நடக்கும் உரையாடல் போன்று எழுதப்பட்டுள்ளது.**

**தூதன்:** வணக்கம் சாத்தானே. எனக்கு ஒரு பெரிய சந்தேகம். *வெளிப்படுத்தல் 14:9,10* வசனங்களில் *"மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்"* என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்?

**சாத்தான்:** வா தூதனே. இதற்கு நம் ஆட்களாகிய கள்ளப்போதகர்கள் கொடுக்கும் விளக்கம் வேண்டுமா. அல்லது உண்மையான அர்த்தம் வேண்டுமா?

**தூதன்:** நம் ஆட்கள் இதை கையில் பயோ சிப்பை பொருத்துவார்கள், நெற்றியில் 666 என்று ரப்பர் ஸ்டாம்பைப் போன்ற முத்திரையிடுவார்கள் என்று கூறுகிறார்கள். சிலர் கடைகளில் விற்கும் பொருட்களில் உள்ள பார்கோடுதான் மிருகத்தின் முத்திரை என்று கூறுகிறார்கள். சில அப்பாவி மக்கள் ஆதார் கார்டுதான் மிருகத்தின் முத்திரை, அதை வாங்கவேமாட்டேன் என்று கூறுகிறார்கள்.

**சாத்தான்:** ஆனால், இந்த மிருகத்தின் முத்திரை என்றால் என்ன? இது எதற்காக வழங்கப்படுகிறது என்று நம் ஆட்கள் சொல்கிறார்களா?

**தூதன்:** அய்யோ! அவர்கள் அதை மிருகத்தின் முத்திரை. பிசாசுடைய முத்திரை என்று மாற்றி, மாற்றி சொல்கிறார்களே தவிர, அது என்ன என்பதை சொல்லவே மாட்டேன் என்பதில் மிகவும் வைராக்கியமாக இருக்கிறார்கள்.

**சாத்தான்:** ஹா ஹா ஹா ஹா ஹா... அதைப் பற்றி அவர்களுக்கு தெரிந்தால் சொல்லமாட்டார்களா?

**தூதன்:** என்ன அவர்களுக்கு தெரியாதா?

**சாத்தான்:** சிலர் அறியாதவர்களாக இருக்கிறார்கள். சிலர் அறிந்திருந்தாலும் சொல்ல முடியாத கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

**தூதன்:** சொல்ல முடியாத அளவிற்கு அவர்களைத் தடுப்பது யார்?

**சாத்தான்:** அவர்களைத் தடுப்பது வேறு யாருமல்ல. அவர்களுடைய சபையின் கொள்கைகள்தான். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கும் சபையின் போதகராக பணிபுரிந்துகொண்டு, ஞாயிறு ஆசரிப்புதான் மிருகத்தின் முத்திரை என்று எப்படி அவர்களால் சொல்ல முடியும்?

**தூதன்:** மிருகத்தின் முத்திரை எதுவென்று தெரிந்தால் அனைவரும் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரிக்கும் சபைகளுக்கு சென்றுவிடுவார்கள். பின்னர் அவர்களுடைய பிழைப்பிற்கு என்ன செய்வார்கள்?

**சாத்தான்:** அதுவும் சரிதான். இப்பொழுது மிருகத்தின் முத்திரை என்றால் என்ன என்பதை நீ சுருக்கமாக சொல். பின்பு நான் அந்த கைகளில், நெற்றியில் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வதென்றால் என்ன என்று சொல்கிறேன்.

**தூதன்:** ஹா ஹா ஹா ஹா ஹா...

ஓய்வுநாளை சனிக்கிழமையிலிருந்து, ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது கடவுள் வழிபாடு குறித்த காரியங்களில் ரோமன் கத்தோலிக்க சபைக்கு ஆன்மீக சக்தியும் அதிகாரமும் உண்டு என்பதைக் காட்டும் முத்திரையாக

இருக்கிறது. (Thomas, H.F. Chancellor of Cardinal Gibbons, in answer to a letter regarding the change of the Sabbath) மிருகம் தன் வாயால் எது தன்னுடைய முத்திரை என்று சொல்கிறதைக் கேட்டீர்களா?

**சாத்தான்:** போப்பு மற்றும் ஜோ பைடன் கைகுலுக்கும் படத்தை போட்டு ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கும் புத்தகத்திலிருந்து நீ இந்தக் குறிப்பை எடுத்திருக்கிறாய். 1260 வருடங்களாக நான் செய்த வேலையின் பலனை இந்த ஒரு புத்தகத்தின் மூலம் அழிக்க முடியாது.

**தூதன்:** தீமையின் தலைவன், குள்ளநரிகளுக்கெல்லாம் தலைவன், திருநெல்வேலிக்கே அல்வா கொடுப்பவர் என்று பல பட்டங்களை உங்களுக்கு கொடுக்கலாம். ஏனென்றால், ஒரு பக்கம் மிருகத்தின் முத்திரை என்றால் என்ன என்று புத்தகங்கள், கைப்பிரதிகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக மிருகத்தின் முத்திரையைப் பற்றி உண்மையைப் பலர் சொல்லிக்கொண்டிருந்தாலும், நம் ஆட்களாகிய கள்ளப்போதகர்கள் சொல்வதைதான் இன்று பலர் நம்புகிறார்கள்.

**சாத்தான்:** நீ என்னை பாராட்டியது போதும். இப்பொழுது மிருகத்தின் முத்திரையை கைகளில் அல்லது நெற்றியில் பெற்றுக்கொள்வதென்றால் என்ன என்று பார்க்கலாம். கை அல்லது நெற்றியைக் குறிக்கும் வேத வசனத்தை உன்னால் சொல்ல முடியுமா?

**தூதன்:** *"அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது"* என்று *உபாகமம் 6:8*-ஆம் வசனம் கூறுகிறது.

**சாத்தான்:** இங்கே கை என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், நெற்றியைப் பற்றி சொல்லப்படவில்லையே.

**தூதன்:** கண்களுக்கு நடுவே நெற்றி இருக்கிறது என்பது சிறு குழந்தைக்கும் தெரிந்த காரியம்.

**சாத்தான்:** சரியாகக் கூறினாய். ஆனால், இங்கே எதை கையின்மேல் அடையாளமாகவும் நெற்றிக்கு நடுவே ஞாபக்குறியாகவும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது?

**தூதன்:** பத்துக் கற்பனைகளைத்தான்.

**சாத்தான்:** இதற்கு என்ன அர்த்தம்? கற்பனைகளை எழுதி கையில் கட்டிக்கொண்டு, நெற்றியில் ஒட்டிக்கொள்ளவேண்டுமென்று அர்த்தமா?

**தூதன்:** ஏன் இப்படி சிறு பிள்ளையைப்போல் கேள்வி கேட்கிறீர்கள்? பத்துக் கற்பனைகளின்படியே கைகள் செய்யும் செயல்கள் இருக்கவேண்டுமென்றும், நெற்றிப் பகுதியில் உள்ள முன்மூளையில் முடிவு எடுக்கும் வேலை நடைபெறுவதால், முடிவு எடுக்கும்போது ஓய்வுநாளை ஞாபகத்தில் வைக்க வேண்டுமென்றும் இந்த வசனம் கூறுகிறது.

**சாத்தான்:** சரியாகக் கூறினாய். இப்பொழுது இந்த வசனத்தின் அடிப்படையில் மிருகத்தின் முத்திரையை நெற்றியிலாவது தன் கையிலாவது தரித்துக்கொள்ளுவது எதைக் குறிக்கிறது என்று சொல்.

**தூதன்:** ஓய்வுநாளைப் பற்றின சத்தியத்தை அறிந்திருந்தும், அதை மனதில் அவமதித்து, ஓய்வுநாளின் கட்டளையை மீறி சனிக்கிழமையில் வேலைக்கு செல்லலாம் என்று முடிவெடுக்கும்போது, அம்மனிதன் மிருகத்தின் முத்திரையை நெற்றியில் பெற்றுக்கொள்கிறான். சனிக்கிழமை வேலைக்கு செல்லும்போது கையிலும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்கிறான்.

**சாத்தான்:** சரியாகக் கூறினாய். இதுதான் உண்மை. ஆனால், இதைச் சொல்கிறவர்களை பலர் பைத்தியம் என்று நினைப்பார்கள். அதுதான் என்னுடைய சதித்திட்டம். சென்று வா மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

**தூதன்:** மிருகத்தின் முத்திரையப் பற்றி சிறப்பாக விளக்கியதற்காக நன்றி சாத்தானே. சென்று வருகிறேன். **(தொடரும்...)**

# கிறிஸ்துவின் தூண்கள்



மருத்துவ மிஷனரி

## சார்லஸ் ஸ்டீவர்ட் தாம்சன்

***ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். (வெளிப்படுத்தல் 3:12)***

மருத்துவர், போதகர், ஆசிரியர், மொழிபெயற்பாளர் என்று பன்முகம் கொண்டவர்தான் சார்லஸ் ஸ்டீவார்ட் தாம்சன். இவர் 1851, ஆகஸ்ட் 17-அன்று இங்கிலாந்தில் உள்ள ஈசிங்டன் என்ற இடத்தில் பிறந்தார். மருத்துவ பயிற்சி பெற்ற தாம்சன் மிஷனரியாக செல்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்தியாவின் மத்திய பகுதியில் உள்ள கெர்வேரா என்ற இடத்திற்கு 1880-ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டார்.

பில்ஸ் என்று அழைக்கப்படும் பழங்குடி இனத்து மக்கள் இந்தியாவின் மத்திய பகுதியில் உள்ள மகாராஷ்ட்ரா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேஷ் மாநிலங்களில் உள்ள மலைத்தொடர்களில் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள சுமார் ஏழு மாவட்டங்களில் தாம்சன் தன் மிஷனரி வேலையைச் செய்தார்.

அவர் செய்த ஊழியத்தின் காரணமாக மனதளவில் பல பில்ஸ் மாணவர்கள் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தாலும், சமுதாயத்திலிருந்து தங்களைப் புறக்கணிப்பார்களென்ற பயத்தால் ஒருவரும் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்வரவில்லை. தன் ஊழியத்தை துவங்கி சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் தனது முதல் ஞானஸ்நானத்தைக் கொடுத்தார் தாம்சன்.

காலரா, தொழுநோய், கொள்ளைநோய், கண் சம்பந்தப்பட்ட நோய், மலேரியா மற்றும் வாதம் போன்ற அனைத்திற்கும் சிகிச்சையளித்தார். தொடர்ச்சியாக பதினைந்து ஆண்டுகளாக தன் மிஷனரி ஊழியத்தை தொடர்ந்த தாம்சன், ஆரம்ப பள்ளிகளையும், சுகாதார மையங்களையும், நிவாரண மையங்களையும், அநாதை இல்லங்களையும் நிறுவினார். மேலும், நற்செய்தியை பில்ஸ் மக்களுடைய சொந்த மொழிக்கு மொழிப்பெயர்த்து அச்சடித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அவர்களுடைய இலக்கணம் மற்றும் சொல்லகராதி புத்தகங்களையும், ஜெபப் புத்தகத்தையும் அவர்களுடைய மொழியில் எழுதி அச்சடித்துக் கொடுத்தார்.

பின்பு 1896-ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்ற தாம்சன் இன்னும் அநேக மருத்துவர்களையும், செவிலியர்களையும், பில்ஸ் மக்களிடையே ஊழியம் செய்வதற்கு அனுப்பவேண்டுமென்று அழுத்தம் கொடுத்தார். 1899-ஆம் ஆண்டில் பில்ஸ் மக்கள் வாழும் இடத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றி அறிந்த தாம்சன் உடனடியாக இந்தியா திரும்பினார்.

பஞ்சத்தின் காரணமாக அங்கிருந்த ஆண்கள், பெண்களையும், பிள்ளைகளையும் கைவிட்டு உணவுக்காக சென்றனர். பில்ஸ் பகுதியில் உள்ள சிறுவர்களும், பெண்களும் உணவு இல்லாமல் பட்டினியால் வாடினார்கள். துரிதமாகச் செயல்பட்ட தாம்சன் நிலைமையை தன் கட்டுப்பாட்டிற்குள்

கொண்டுவந்தார். ஏழு நிவாரண மையங்களை ஏற்படுத்தி சுமார் 700 குழந்தைகளுக்கும், சில பெரியவர்களுக்கும் உணவளித்தார். ஆதரவற்ற பிள்ளைகளுக்காக இல்லங்களை துவங்கிய தாம்சன் 1900-ஆம் ஆண்டில் பட்டினியால் வாடிய சுமார் 5500 குழந்தைகளுக்கு இரண்டு வேளை உணவளித்தார்.

1900-ஆம் ஆண்டு மே மாதத்தில் தாம்சன் காலரா நோயினால் பாதிக்கப்பட்டார். அப்பொழுது பில்ஸ் மக்கள் அவருக்கு ஐரோப்பிய முறையில் மருத்துவம் செய்ய முயற்சித்தார்கள். ஆனால், 1900, மே 19-அன்று தாம்சன் சிகிச்சை பலனளிக்காத காரணத்தால் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

பில்ஸ் மக்களின் இரட்சிப்பிற்காக உழைத்து மரித்த "பில்ஸ் மக்களின் தந்தை" என்று தாம்சன் அவர்களைப் பற்றி கூறிகிறார்கள். மேலும், "கொடைவள்ளல்" என்ற அடைமொழிக்கும் சொந்தக்காரறாக இருந்தார் தாம்சன். தாம்சன் அவர்களுடைய மரணத்திற்குப்பின் பல தன்னார்வலர்கள் முன் வந்து பில்ஸ் மக்களுக்காக ஊழியம் செய்தார்கள்.

*மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்* என்று *யோவான் 12:24*-ஆம் வசனத்தில் இயேசு கிறிஸ்து கூறியதைப்போல், தாம்சன் அவர்களின் மரணம் பல மிஷனரிகள் எழும்புவதற்கு காரணமாக அமைந்தது. பலருக்கு உத்வேகமாக இருந்தார் தாம்சன். பில்ஸ் மக்களுக்காக தன் வாழ்நாளில் சுமார் 20 வருடங்களாக உழைத்த சார்லஸ் ஸ்டீவர்ட் தாம்சன் கிறிஸ்துவின் தூணாக நம்முன் நிற்கிறார்.

நமக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் எப்பொழுது தேவனுக்காக ஊழியம் செய்யப்போகிறோம்?





**நல்ல போதகரே,**

*நித்திய ஜீவனை அடைவதற்கு*

*நான் என்ன செய்ய வேண்டும்?*

*இயேசு கிறிஸ்துவின் போதகத்திலிருந்து,*
*நித்திய ஜீவனை அடைவதற்கான*
*வழியைக் கண்டடைவதே*
*இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.*

*உங்கள் புத்தகத்தை முன்பதிவு செய்வதற்கு*
*8904072759 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு*
*"GM" என்று டைப் செய்து சிறிய இடைவெளி விட்டு*
*எத்தனை பிரதிகள் வேண்டுமென்று குறிப்பிட்டு*
*அனுப்புங்கள்.*
*உங்களுக்கு 5 பிரதிகள் வேண்டுமென்றால்*
*"GM 5" என்று அனுப்புங்கள்.*

# வேதாகமம் பேசட்டும்



**(வேதாகமத்தை படிக்கும்போது, நமக்குள் எழும்பும் கேள்விகளுக்கு, வேதாகமத்தின் மூலமே விடையைக் கண்டடைவதே இந்தப் பகுதியின் நோக்கம்)**

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்று மாற்கு 1:15-ஆம் வசனம் கூறுகிறது. இதில் "காலம் நிறைவேறிற்று" என்னும் சொற்றொடர் எந்தக் காலத்தைக் குறிக்கிறது?**

இந்த வசனத்தில் உள்ள "காலம் நிறைவேறிற்று" என்னும் சொற்றொடர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆங்கில வேதாகமத்தில் இந்த சொற்றொடருக்கு நிகராக "Time is fulfilled" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கணவன் வீட்டிலிருந்து தனது இருச்சக்கர வாகனத்தை பழுது பார்ப்பதற்காகப் புறப்பட்டார். அப்பொழுது மனைவி நீங்கள் திரும்பி வருவதற்கு எவ்வளவு நேரமாகும் என்று கேட்டார்கள். 2 மணி நேரமாகும் என்று கணவன் பதிலளித்தார். வாகனத்தைப் பழுதுபார்த்துவிட்டு அவர் வீட்டிற்கு வந்தார். உடனே மனைவி, சொன்னதைப்போல சரியான நேரத்திற்கு வந்துவிட்டீர்களே என்று சொல்லி சந்தோஷமாக கணவனை வரவேற்றார்கள்.

இங்கே, கணவன் 2 மணி நேரத்திற்குள் வருவேன் என்று சொன்ன காரணத்தால்தான், மனைவி "சரியான நேரத்திற்கு வந்துவிட்டீர்கள்" என்று கூறினார்கள். ஒருவேளை கணவன் எந்த ஒரு நேரத்தையும் குறிப்பிடாமல் சென்றிருந்தால், மனைவி இந்த வாக்கியத்தை சொல்லியிருக்கமாட்டார்கள். அதைப்போல் இங்கே சொல்லப்படும் காலம் வேதாகமத்தில் ஏற்கனவே சொல்லப்பட்ட தீர்க்கதரிசன காலத்தைதான் குறிக்கிறது.

*காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். (கலாத்தியர் 4:4)*

இந்த வசனம் கிறிஸ்துவின் பிறப்பை பற்றி கூறுகிறது. காலம் நிறைவேறினபோது கிறிஸ்து பிறந்தார் என்பதே இந்த வசனத்தின் பொருளாகும்.

அப்படியானால் கிறிஸ்துவின் வருகையைப் பற்றின காலத்தீர்க்கதரிசனம் எங்கே கொடுக்கப்பட்டுள்ளது?

*இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்; அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்.*

*(தானியேல் 9:25)*

இங்கே கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தைப் பற்றி தானியேல் தரிசனம் காண்கிறார். ஆனால், இந்த வசனம் மறைபொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் நேரடியான பொருளை வைத்துப்பார்க்கும்போது, கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தைச் சரியாகக் கணிக்க முடியாது. இந்தக் கணக்கை சரியாக கணிப்பதற்கான விதிமுறையை தேவன் வேதாகமத்தின் மற்றொரு வசனத்தில் கொடுத்தள்ளார்.

*ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன். (எசேக்கியேல் 4:6)*

இந்த வசனத்தின்படி வார கணக்கை, நாட்களாக மாற்றி, ஒரு நாளை ஒரு வருடம் என்று கணக்கிடும்போது கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தைச் சரியாகக் கணக்கிடலாம்.

| | | |
|---|---|---|
| 7 வாரங்கள் | - | 49 நாட்கள் |
| 62 வாரங்கள் | - | 434 நாட்கள் |

இதன்படி மொத்தமாக 483 நாட்கள் வருகிறது. இதை ஒரு நாளுக்கு ஒரு வருடம் என்று கணக்கிட்டால், எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல் 483 வருடங்களை கணக்கிடும்போது மேசியாவின் வருகையின் காலத்தை கண்டுப்பிடிக்கலாம்.

வரலாற்றின்படி கி.மு. 457-ஆம் ஆண்டு எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டது. கி.மு. 457-ஆம் ஆண்டு முதல் 483 ஆண்டுகளைக் கணக்கிடும்போது, அந்தக் கணக்கு கி.பி. 27-ஆம் ஆண்டில் வந்து நிற்கிறது. கி.பி. 27-ம் ஆண்டில் என்ன சம்பவம் நடந்தது என்று வரலாற்றைப் பார்க்கும்போது, அந்த ஆண்டில் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றார் என்று சொல்லப்படுகிறது.

7 வாரங்கள் + 62 வாரங்கள் = 69 வாரங்கள் (483 ஆண்டுகள்)

| | |
|---|---|
| கி.மு. 457<br>எருசலேம் எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை பிறந்தது | கி.பி. 27<br>இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம் |

தேவனுடைய குமாரனான இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து யோசேப்பு, மரியாள் தம்பதியினரின் மகனாக வாழ்ந்து, தன் தகப்பனுக்கு உதவியாக தச்சு வேலையைச் செய்தார். கி.பி. 27-ஆம் ஆண்டில் ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்து, தன் பொது ஊழியத்தை துவங்கினார். இந்தக் காலத்தைப் பற்றிதான் "காலம் நிறைவேறிற்று" என்று இயேசு கிறிஸ்து கூறினார். வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வசனத்திற்கும் நாம் நினைப்பதைவிட ஆழமான அர்த்தம் உள்ளதென்பதற்கு *மாற்கு 1:15*-ஆம் வசனம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வசனத்தின் பொருள் தானியேல் புத்தகத்தில் புதைந்துள்ளதைப்போல் இன்னும் அநேக வசனங்களின் பொருள் வேதாகமத்தில் உள்ள மற்ற வசனங்களுக்குள் புதைந்து கிடக்கிறது. ஜெபம் செய்து, பரிசுத்த ஆவியானவரின் துணையோடு வேதாகமத்தை வாசிக்கும்போது, தேவன் மறைபொருட்களை பரிசுத்த ஆவியானவரின் மூலம் உங்களுக்கு வெளிப்படுத்துவது நிச்சயம். இப்படியாக நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது, வசனத்தின் உண்மையான பொருளை அறிந்துகொள்ளலாம்.

**வேதாகமம் மாத்திரம் பேசட்டும்...**

# ஓய்வுநாளின் அதிசயம்



ஸ்ரீகாந்த்

## அதிசயமான பயணம்!

என் பெயர் ஸ்ரீகாந்த. நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தவன். என் 17-ம் வயதில் என் நண்பர் கூப்பிட்ட காரணத்தால் கிறிஸ்தவ ஆலயத்திற்குச் சென்றேன். அங்கே ஓய்வுநாள் பள்ளி வகுப்புகள் நடந்துகொண்டிருந்தது. வகுப்பை நடத்திய ஆசிரியர் கிறிஸ்து பரலோகத்திலிருந்த தன் ஸ்தானத்தை விட்டு, இந்த உலகத்தில் பிறந்து, நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று கூறினார்.

தேவனாகிய கிறிஸ்து மரித்தார் என்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் விருப்பப்பட்டு ஆலயத்திற்குச் சென்றேன். அது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. ஓய்வுநாள் பள்ளியின் மூலம் வேதாகமத்தின் முக்கியத்துவத்தையும், தினமும் வேதாகமத்தைப் வாசிப்பதன் மூலமாகக் கிடைக்கும் ஆசீர்வாதங்களையும் அறிந்துகொண்டேன். என்னிடத்திலோ வேதாகமம் இல்லை. ஜெபத்தின் மூலம் கிறிஸ்துவிடம் எனக்கு ஒரு வேதாகமம் வேண்டுமென்று கேட்டேன்.

அடுத்த ஓய்வுநாளில் என் நண்பர் ஒருவர் எனக்கு ஒரு வேதாகமத்தைப் பரிசாகக் கொடுத்தார். அதுவே என் முதல் வேதாகமம். அந்த வேதாகமத்தை நான் ஆசையோடு வாசித்துக்கொண்டிருந்தேன். இரவு 11 மணியளவில் என் தந்தை என் அறையில் எதற்காக லைட் எரிந்துகொண்டிருக்கிறது என்று பார்ப்பதற்காக வந்தபோது நான் வேதாகமம் வாசிப்பதைப் பார்த்து, நாம் கிறிஸ்தவர்களல்ல, இந்து என்று கூறி என் வேதாகமத்தைப் பிடுங்கி பீரோவில் வைத்துப் பூட்டினார். மிகுந்த ஏமாற்றமடைந்த காரணத்தால் மீண்டும் வேதாகமத்திற்காக ஜெபித்தேன். மீண்டும் என் மற்றோரு நண்பர் மூலம் எனக்கு இரண்டாவது வேதாகமத்தை தேவன் கொடுத்தார்.

இந்தமுறை நான் மிகவும் கவனமாக இருந்தேன். நான் கல்லூரி படிப்பை துவங்கும்வரை இரவு நேரத்தில் டார்ச் லைட் மூலம் வேதாகமத்தைப் படித்தேன். பின்பு கல்லூரிக்கு செல்லும்போது வேதாகமத்தை எடுத்துக்கொண்டு கல்லூரிக்குச் சென்று அங்கு படித்தேன். இவ்விதமாக தேவன் ஆவிக்குரிய வாழ்க்கையில் என்னை வளர்ச்சியடையச் செய்தார். நான் என் இளங்கலைப் படிப்பை முடிப்பதற்கு சற்று முன்பாக என் தந்தை என்மீது மிகுந்த கோபம் நிறைந்தவராக வந்து என்னை பெல்ட்டால் அடிக்க துவங்கினார். இரவு ஏழு மணிக்கு அவர் என்னை அடிக்க துவங்கி, இரவு 9 மணிவரை அடித்தார். என்னை கிறிஸ்தவர்கள் மூளை சலவை செய்துவிட்டார்கள் என்று நினைத்தார்.

அவர் என்னை அடிப்பதை நிறுத்தியப்பின் 9 மணிக்கு என் தந்தையோடு பேச துவங்கினேன். எதற்காக நான் கிறிஸ்தவனாக மாறினேன் என்பதை அவர்களிடம் சொல்லி, நான் நான்கு ஆண்டுகளாக ஒளித்து வைத்து படித்த, என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு காரணமான, புத்தகங்கள் அனைத்தையும் அவரிடம் காண்பித்தேன். என் மாற்றத்திற்கு காரணம் யாருமல்ல என்பதை அவருக்கு புரிய வைத்து, சிருஷ்டிப்பு முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையுள்ள சம்பவங்கள் அனைத்தையும் விவரித்துக் கூறினேன். அப்பொழுது காலை 4 மணி. உன்னை யாரும் மூளை சலவை செய்யவில்லை என்பதற்காக நான் சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லி அவர் என்னிடமிருந்து எடுத்துக்கொண்ட என் முதல் வேதாகமத்தை என்னிடம் கொடுத்தார். என்ன

ஒரு அதிசயம்? என் தந்தை மிகவும் அன்பானவர். குடும்பத்தில் உள்ள மற்ற பிரச்சனைகளினால் ஏற்பட்ட மன அழுத்தத்தின் காரணமாகவே என்மீது கோபப்பட்டு அடித்தார் என்பதை இதன் மூலம் நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

உண்மையான ஓய்வுநாளைப் பற்றி அறிந்துகொண்டபின், நான் ஒரு ஓய்வுநாளிலும் கல்லூரி வகுப்புகளுக்கும் சென்றதில்லை, தேர்வுகளும் எழுதியதில்லை. இதன் காரணமாக என் கல்லூரியில் எனக்கு அநேக பிரச்சனைகள் ஏற்பட்டன. என் பெற்றோர்கள் என்னைப் புரிந்துகொள்ளவில்லை. என்மேல் கோபமடைந்தார்கள். என் கல்லூரி நிர்வாகமும் என்னுடைய விசுவாசத்தைப் புரிந்துகொள்ளவில்லை. என் கல்லூரி நிர்வாகத்தினர் நான் சனிக்கிழமையில் வகுப்புகளுக்கு விடுப்பு எடுத்ததற்காகவும், தேர்வுகள் எழுதாததற்காகவும் ஒரு பெரிய தொகையை அபராதமாகச் சுமத்தினார்கள். இதனால் நான் கடினமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டேன். நான் தனிமையாக இருப்பதாக உணர்ந்தேன். இந்தப் பிரச்சனைகளுக்காக கண்ணீருடன் ஜெபித்தேன். என் வீட்டில் உள்ள பாத்ரூம்தான் என் ஜெப அறையாக இருந்தது.

இக்கட்டான சூழ்நிலையின்போது சபையைச் சார்ந்த குடும்பத்தினர்களும், என் நண்பர்களும் எனக்கு உதவியாக இருந்தார்கள். நான் கல்லூரிக்கு கட்டவேண்டிய அபராத தொகையை தேவன் எனக்கு சரியான நேரத்தில் கொடுத்தார். என்ன ஆச்சர்யம்? அதுமட்டுமல்லாமல், யாரும் நம்பமுடியாத ஒரு அதிசயம் நடந்தது. என் கல்லூரி நிர்வாகத்தினர் என்னை அந்த ஆண்டின் சிறந்த மாணவனாக தேர்ந்தெடுத்தார்கள். அதற்காக 3000 மாணவர்களுக்கு முன்பாக என் பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. என் பெற்றோர்கள் என்ன நடக்கிறது என்று புரியாமல் திகைத்து நின்றாலும், எனக்காக சந்தோஷப்பட்டார்கள்.

என் முதுகலை படிப்பை முடித்தவுடன் சபையைச் சார்ந்த பள்ளியில் ஆசிரியராக வேலைக்கு சேர்ந்தேன். அது என் பெற்றோருக்குப் பிடிக்கவில்லை. அதன்பின் சபையைச் சார்ந்த பெண்ணை நான் திருமணம் செய்ததையும் என் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 9 வருடங்களாகப் பிரிந்திருந்தப்பின், மீண்டும் என்னை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களும் கிறிஸ்துவின் அன்பை ஒரு நாள் புரிந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையோடே நானும் என் மனைவி அர்ச்சனாவும் ஜெபத்துடன் காத்திருக்கிறோம். ஆமென்.

**ஆசிரியரிடமிருந்து...**

அன்புள்ள சகோதர சகோதரிகளே,

தேவனுக்கே மகிமை! சிட்டுக்குருவி 4-11 பதிப்பை வெளியிட உதவிய அன்பு உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சிறிய ஊழியத்தை ஜெபத்தின் மூலமாகவும், புத்தகத்தைப் பகிர்வதன் மூலமாகவும், பொருளாதார உதவியின் மூலமாகவும் ஆதரித்துவரும் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அன்பு சகோதரன்,
ஆலன் அன்பரசன் ஏசுதாஸ்.

**இந்தப் புத்தகம் அநேகருக்கு இலவசமாகக் கிடைப்பதற்கு உங்களால் முடிந்த உதவிகளை எங்களுக்குச் செய்யுங்கள்!**

Dannys Publications
IndusInd Bank , Tiruchengode Branch
Account No: 258904072759
IFSC Code: INDB0001671

G Pay *8904072759*

# ஆரோக்கியம்



**நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு நாம் எவற்றை சாப்பிட வேண்டும் என்ற கேள்விக்குப் பதிலே "ஆரோக்கியம்" என்ற இந்தப் பகுதி.**

என்னை கருவேப்பிலையைப்போல தேவைக்குப் பயன்படுத்திவிட்டு தூக்கியெறிந்துவிட்டார்கள் என்று பலர் கூறுவதுண்டு. கருவேப்பிலையை தாளிப்பதற்கு மட்டுமே சிறிதளவு பயன்படுத்துகிறோம் என்பதே இக்கூற்றிற்கு காரணம். மேலும், காய்கறி மற்றும் மளிகை கடைகளில் இலவசமாகக் கிடைக்கும் ஒரு பொருள் என்றால் அது கருவேப்பிலைதான். இலவசமாகக் கிடைப்பதால் அதை பயனற்றதாக நினைக்காதீர்கள். கருவேப்பிலையின் ஊட்டசத்துக்கள் மற்றும் நன்மைகளைப் பற்றி பார்க்கும்போது அதன் உண்மையான மதிப்பை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

## கருவேப்பிலையில் உள்ள ஊட்டச்சத்துக்கள்

வைட்டமின் ஏ,பி, சி, இ, நார்ச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, மாவுச்சத்து மற்றும் போலிக் ஆசிட் போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்த இலைதான் கருவேப்பிலை.

## கருவேப்பிலை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்

இரத்தசோகை உள்ளவர்கள் கருவேப்பிலையை அதிகமாகச் சாப்பிடும்போது, விவைில் குணமடைகிறது. நோய்கள் வருமுன் காப்பதே சிறந்தது. நீங்கள் கருவேப்பிலையை தொடர்ச்சியாக சாப்பிடும்போது இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை சீராக்கி நீரிழிவு நோயிலிருந்து உங்களைக் காக்கும். ஒருவேளை நீங்கள் நீரிழிவு நோய் உள்ளவர்களாக இருந்தாலும் கருவேப்பிலையை தொடர்ச்சியாக சாப்பிடும்போது அதில் உள்ள நார்ச்சத்து உடலில் உள்ள இன்சுலின் அளவை சீர் செய்து நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைக்கிறது.

குழம்பு கூட்டுகளில் தாளிப்பதற்காக கருவேப்பிலையை பயன்படுத்துவது சாப்பிடும் உணவின் செரிமானத்திற்காகவே. ஆனால், நாம் சேர்க்கும் ஓரிரு கருவேப்பிலையினால் அந்த நோக்கம் நிறைவேறாது. ஆகவே, நாம் கருவேப்பிலையை அதிகமாக பயன்படுத்தும்போது அது செரிமானத்திற்கு உதவுவது மட்டுமல்லாமல், உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளைக் கறைத்து உடல் பருமனையும் தடுக்கிறது. கொலஸ்ட்ரால் பிரச்சனை உள்ளவர்கள் தொடர்ந்து கருவேப்பிலையை சாப்பிட்டால் கொலஸ்ட்ராலின் அளவைக் கட்டுப்படுத்தும். மேலும், தலைமுடி நரைக்காமல் கருமையாக இருப்பதற்கும், கூந்தல் அதிகமாக உதிரும் பிரச்சனை உள்ளவர்களும், கருவேப்பிலையை தொடர்ச்சியாக சாப்பிட்டால் பலன் கிடைக்கும்.

## கருவேப்பிலையை எப்படி சாப்பிட்டால் பலன் கிடைக்கும்?

தாளிக்கும்போது பயன்படுத்தும் சில கருவேப்பிலையினால் மணம் கிடைக்குமே தவிர உடலுக்கு எந்த பலனும் கிடைக்காது. கருவேப்பிலையின் பலனை முழுமையாகப் பெறுவதற்கு நீங்கள் அதன் இலைகளை பச்சையாக மென்று சாப்பிடலாம், அல்லது தண்ணீர் சேர்த்து அரைத்து ஜுஸாகக் குடிக்கலாம். நீங்கள் தினந்தோறும் கருவேப்பிலையைப் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ்வதற்கு எங்கள் வாழ்த்துக்கள்.

# கிறிஸ்தவ வீடு



*(பகுதி – 27)*

## பரிசுத்தமான வட்டம்

### ➢ குடும்ப வட்டத்தின் பரிசுத்த நிலை

குடும்ப வட்டத்தில் பரிசுத்த நிலை பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வட்டத்திற்குள் கணவன் மனைவியைத் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படக்கூடாது. கணவன் மனைவிக்கு மத்தியில் எந்த இரகசியமும் இருக்கக்கூடாது. கணவன் செய்த தவறுகள் அல்லது அவருடைய குறைகளைப் புதைக்கும் கல்லறையாக மனைவியின் மனது இருக்க வேண்டும். அதைப்போல் மனைவி செய்த தவறுகள் அல்லது அவருடைய குறைகளைப் புதைக்கும் கல்லறையாக கணவனுடைய மனது இருக்க வேண்டும். ஒருவருடைய உணர்ச்சியைப் புண்படுத்தும்படி கேலி செய்யக்கூடாது. கணவனைப் பற்றி மனைவியும், மனைவியைப் பற்றி கணவனும் மற்றவர்களிடம் குற்றஞ்சாட்டக்கூடாது. உங்கள் குடும்பத்தைச் சுற்றி பரிசுத்தமான கேடயம் இருக்க வேண்டும்.

உங்கள் குடும்ப வட்டம் பரிசுத்தமான இடமாகவும், பரலோகத்தின் சின்னமாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கு நண்பர்கள் இருக்கலாம். ஆனால், அவர்களுடைய தலையீடு உங்கள் குடும்பத்தில் இருக்கக்கூடாது. குடும்ப பந்தம் வலுமையானதாகவும், நம்பிக்கையுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

### ➢ நாவு, காதுகள் மற்றும் கண்களும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்

குடும்ப வட்டத்தில் உள்ள அனைவருடைய நாவு, காதுகள் மற்றும் கண்களும் பரிசுத்தமாக்கப்படுவதற்காக ஜெபம் செய்ய வேண்டும். தீய காரியங்களுக்கு முன்பாக நிற்கும்போது அவைகளை மேற்கொள்வது அவசியமாகும். கிறிஸ்து ஒவ்வொருவருடைய குணங்களும், நல் மனம் வீசச் செய்திருக்கிறார். பலர் தங்கள் குடும்ப வட்டத்தில் கிறிஸ்துவை அவமதித்து அவரது குணத்தை தவராகப் பிரதிபலிக்கிறார்கள். பொருமை, சகிப்புத்தன்மை, மன்னிப்பு மற்றும் உண்மையான அன்பு இல்லாமல் பலர் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சித்தம், கிரியை மற்றும் குணத்தை காண்பிப்பதைவிட, தங்கள் சுய விருப்பு வெறுப்புகளுக்கே பலர் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் அன்பினாலும், இரக்கத்தாலும் நிறைந்திருந்தது. அவருடைய உன்னத இயல்புகளை நாம் வளர்க்க வேண்டும்.

### ➢ ஒற்றுமை, அன்பு, சமாதானம்

தந்தைமார்களும், தாய்மார்களும் அன்பை ஊட்டி பிள்ளைகளை வளர்க்க வேண்டும். அந்த அன்பினால் பிள்ளைகள் செழித்து வளர வேண்டும். சாத்தானுடைய வல்லமைகள் வீட்டிற்குள் ஊடுருவுவதை தடுக்க வேண்டும். குடும்பத்தின் அங்கத்தினர்களின் குணங்களை தாக்கி குறைகளை ஏற்படுத்துவதே அவனுடைய நோக்கம்.

தாங்கள் இருவரும் இணைந்து சுமக்க வேண்டிய பாரத்தை கருத்தில்கொண்டு, வேற்றுமைகளை தவிர்க்க வேண்டும். சிறிய வேற்றுமைகளின் மூலம் அவர்கள் சாத்தானை தங்கள் வீட்டிற்குள் வரவேற்கிறார்கள். பெற்றோர்களும், பிள்ளைகளும் தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்வதற்கு

தூண்டுவதே இந்த தீய சக்திகளின் வேலையாக இருக்கிறது. குடும்ப வாழ்க்கையில் அனுதினமும் பிரச்சனை ஏற்பட்டாலும், கணவனும் மனைவியும் தேவ அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். ஒற்றுமை, அன்பு மற்றும் சமாதானம் குடும்பத்தில் நிறைந்திருப்பதற்கு குடும்பத்தின் தலைவராகிய கணவன் தன் மனைவியிடமும், பிள்ளைகளிடமும் மென்மையாகவும், இரக்கமுள்ளவராகவும் செயல்பட வேண்டும்.

### ➢ *ஒற்றுமையான குடும்பத்தின் இரகசியம்*

குடும்பத்திலும், சபையிலும் ஒற்றுமையின்மை ஏற்படுவதற்கு காரணம் அவர்கள் கிறிஸ்துவிடமிருந்து பிரிந்திருப்பதே. கிறிஸ்துவுடன் சமீபித்து வருவதும், மற்றவர்களிடம் சமீபித்து வருவதும் ஒன்றே. குடும்பத்திலும் சபையிலும் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு எந்த இராஜதந்திரமும் அவசியமில்லை. இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே. அது கிறிஸ்துவுடன் இணைந்திருப்பதே.

### ➢ *ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்*

குடும்பம் என்பது ஒரு பரிசுத்தமான சமூகம். உடலின் உறுப்புகள் அதன் மற்ற உறுப்புகளுக்கு உதவியாக இருப்பதுபோல குடும்பத்தின் அங்கமாக இருக்கும் ஒவ்வொருவரும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும். வீட்டின் வேலைகள் அனைத்தும் எவ்வித பிரச்சனைகளுமின்றி சிறப்பாக செய்யப்பட வேண்டும்.

குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும். ஒருவருக்கொருவர் எதிரான வேலைகளை செய்யக்கூடாது. அனைவரும் இணைந்து ஒற்றுமையாக, ஒருவரையொருவர் ஊக்குவித்து வேலைகளைச் செய்ய வேண்டும். வேலை செய்யும்போது பேசும் வார்த்தைகள் மென்மையாகவும், பேசும் தொனி அமைதி நிறைந்ததாகவும், செய்யும் செயல்கள் சகிப்புத்தன்மை நிறைந்ததாகவும் இருக்கும்போது அந்த இடம் குழப்பமற்றதாக இருக்கும். இப்படியாக குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து வேலை செய்யும்போது, அம்மாவின் வேலை எளிமையாக முடியும்.

ஆறு வயது முதல் அனைவரும் தங்கள் தகுதிக்கு ஏற்றபடி குடும்பத்தின் வேலைகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்துகொள்ள வேண்டுமென்பதை குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### ➢ *ஒரு பொருத்தமான தீர்வு*

குடும்பத்துடன் சேர்ந்து வாழும்போது, கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டும். நம் வார்த்தைகளும், செயல்களும், சிந்தையும் காக்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் சரியான கிறிஸ்தவ கோட்பாட்டில் நடப்பதற்கான விழியைக் கற்றுக்கொண்டு, அதில் சரியாக நடப்பதற்கு தேவையான பயிற்சியை எடுத்துக்கொள்வதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ வேண்டும். தேவனுடைய வார்த்தையாகிய சத்திய வேதத்தை இரவும், பகலும் தியானித்து, அதில் உள்ள கருத்துக்களின்படி முறையாக வாழ வேண்டும். நாம் பாதுகாப்பாக இருப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு பட்டயம் உண்டு. இந்தப் பட்டயம் தீமைக்கு எதிரான பட்டயம். இது சாத்தானை பயப்படுத்தும் பட்டயம். இது நீதிமான்கள் விரும்பும் பட்டயம். இது இருபுறமும் கருக்குள்ள பட்டயம். இது ஆவியின் பட்டயம். இது தேவனுடைய வார்த்தையாகிய பட்டயம். இந்தப் பட்டயத்தின் பெயர் பரிசுத்த வேதாகமம்!

இதைப்போன்ற பாதுகாப்பான பட்டயம் எதுவுமில்லை. இதுவே உங்கள் குடும்பத்தைக் காக்கும் பட்டயம்! **(தொடரும்...)**

# மரணமே... உன் ஜெயம் எங்கே?




குற்றமற்ற கிறிஸ்து மனிதர்களின் பாவங்களைச் சுமந்துகொண்டு ஒரு குற்றவாளியைப்போல சிலுவையில் தொங்கினார். அவரை விசுவாசித்த அனைவரும் செய்வதறியாது நின்றார்கள். அவருடைய சீடர்களும் யூதர்களுக்கு பயந்த காரணத்தால் ஒளிந்துகொண்டிருந்தார்கள். தீர்க்கதரிசனங்களின்படி பாவத்திற்கு மரித்த கிறிஸ்து, மரணத்தை வென்று, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

*மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. (ரோமர் 6:9)*

எலியாவின் மூலம் உயிர்த்தெழுந்த சாறிபாத் விதவையின் மகனும், எலிசாவின் மூலம் உயிர்த்தெழுந்த சூனேமியாளின் மகனும், எலிசாவின் கல்லறையில் எறியப்பட்டு உயிர்த்தெழுந்த மனிதனும் மீண்டும் மரித்தார்கள். கிறிஸ்து எழுப்பிய நாயீன் விதவையின் மகனும், யவீருவின் மகளும், லாசருவும், பேதுருவின் மூலம் உயிர்த்தெழுந்த தொற்காளும், பவுலின் மூலம் உயிர்த்தெழுந்த ஐத்திகுவும் மீண்டும் மரித்தார்கள். ஆனால், கிறிஸ்து மீண்டும் மரிக்கவில்லை. கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் மரிக்கவில்லை.

என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்திற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே உதாரணம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று நாம் அறிந்திருப்பதுபோல, கிறிஸ்துவுக்குள் மரித்து, பிழைத்தவனும் மீண்டும் மரணத்தை ருசிப்பதில்லை என்பதற்கு அவரோடே எழுந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலே சாட்சி.

*மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரிந்தியர் 15:21,22)*

ஆதாம், ஏவாள் மூலம் நித்தியமாக வாழும்படி படைக்கப்பட்ட மனித இனத்திற்கு மரணம் உண்டாயிற்று. ஆனால், மரணத்தை வென்ற கிறிஸ்துவுக்குள் மரிக்கும் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதே வாக்குத்தத்தம். கிறிஸ்துவுக்குள் மரிக்கும் ஒவ்வொருவரும், உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்பதற்கான முன்னோட்டம்தான் கிறிஸ்துவுடன் எழுந்த பரிசுத்தவான்களுடைய உயிர்த்தெழுதல்.

*பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய*

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)*

பாவத்தின் காரணமாக மரணம் ஏற்பட்டது. ஆனால், தேவன் கிருபையாக நமக்கு கிறிஸ்துவின் மூலமாக நித்திய ஜீவனைத் தருகிறார். இந்த பாலிசியை எடுத்தால் உங்கள் உயிர் காக்கப்படும். நீங்கள் மரணமடைவதில்லை என்று கூறும் ஒரு ஆயுள் காப்பீடு நிறுவனத்தையும் நீங்கள் பார்க்க முடியாது. என்னை விசுவாசித்தால் நீங்கள் மரித்தாலும் பிழைப்பீர்களென்று கூறும் கிறிஸ்துவே உண்மையான ஆயுள் காப்பீட்டைத் தருகிறார். இதைவிட சிறந்த ஆயுள் காப்பீட்டை எந்த நிறுவனத்தாலும் கொடுக்க முடியாது. இந்த ஆயுள் காப்பீட்டு பாலிசியின் பெயர் கிருபை.

கிருபை என்னும் இந்தப் பாலிசியை வாங்குவதற்கு பணமோ, வங்கி கணக்கோ, காசோலையோ அவசியமில்லை. இந்தப் பாலிசியை கிறிஸ்து இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் இலவசமாகத் தருகிறார். இந்தப் பாலிசியைப் பெறுவதற்கு ஆதார் அட்டை, பான் அட்டை போன்ற ஆவணங்கள் எதுவும் அவசியம் இல்லை. இந்தப் பாலிசியைப் பெறுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் எதுவும் கையெழுத்திட அவசியம் இல்லை. அப்படியானால், இந்தப் பாலிசியைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும்.

## விசுவாசம் என்றால் என்ன?

*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரேயர் 11:1)*

கணவன் மனைவிக்கு ஒரு குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தவுடன் தந்தை வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார். வீட்டில் அம்மா தினமும் மூன்று வேளையிலும் பிள்ளைக்கு உணவைப் பரிமாறினாள். இந்த நிலையில், நாளைய தினத்திலும் அம்மா உணவு கொடுப்பார்கள் என்று அந்தப் பிள்ளை நினைப்பது நம்பிக்கை. அப்பாவை அறியாத அந்தக் குழந்தையிடம், அந்த தாய் வெளிநாட்டில் இருக்கும் உன் அப்பா அடுத்த மாதம் வீட்டிற்கு வருகிறார். அவர் வரும்போது உனக்கு புது ஆடைகள் மற்றும் பொம்மைகளை வாங்கி வருவார்கள் என்று கூறினாள். அந்த தாய் கூறியதை நம்பிய குழந்தை, தன் தந்தையின் வருகைக்காக காத்திருப்பது விசுவாசம். ஏனென்றால், அந்தக் குழந்தை தந்தையைக் கண்டதில்லை. ஆனாலும், அம்மா கூறினபடி அப்பா வருவார் என்று நம்பிக்கையோடே காத்திருக்கிறது.

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்.

*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். (எபிரேயர் 11:6)*

**(தொடரும்...)**

# எருசலேமுக்குள் பாபிலோன்




## பாபிலோனுக்குள் எருசலேம்

ஓய்வுநாளைப் பரிசுத்த குலைச்சலாக்கினதாலே, எருசலேமுக்குள் பாபிலோன் புகுந்தது. எருசலேமில் இருந்த ராஜகுலத்தார்களிலும் துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும், அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரை பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுவந்தார்கள்.

அங்கே அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட வாலிபர்கள் நூறு பேராகவோ, ஆயிரம்பேராகவோ இருக்கலாம். ஆனால், அதில் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் நால்வர்தான். எதற்காக அவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது?

## உணவில் கட்டுப்பாடு

ராஜாவின் உணவு இந்த நால்வரின் முன்பாக வைக்கப்பட்டபோது, அதில் அசுத்தமான உணவு வகைகள் இருந்த காரணத்தால் அதை மறுத்தார்கள். பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கேட்டார்கள். மாமிசம் சாப்பிடாதவனும், திராட்சரசம் குடிக்காதவனும் யூதனாக இருக்க முடியாது. ஏனென்றால், யூத முறைமையின்படி பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்போது ஆட்டுக்குட்டியின் மாமிசத்தை சாப்பிடுவதும், திராட்சரசம் குடிப்பதும் அவசியமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது எதற்காக இந்த நால்வரும் மாமிசம் சாப்பிடாமலும், திராட்சரசம் குடியாமலும் இருக்க வேண்டும்?

அவர்கள் பாபிலோனுக்கு சுற்றுலாவிற்கு வரவில்லையென்பதையும், அடிமைகளாக வந்திருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்திருந்தார்கள். எருசலேம் ஆலயமும், பட்டணமும் அழிக்கப்பட்டு, அவர்கள் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கும்போது அவர்கள் பெருந்தீனிக்காரர்களைப்போல சாப்பிட விரும்பவில்லை. அவர்கள் ஒருவிதமான உபவாசம் இருந்தார்கள். உணவில் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். அதன் காரணமாக இந்த நான்கு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்.

## எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு பொற்சிலையை நிறுத்தி அதை அனைவரும் வணங்க வேண்டுமென்று கட்டளையிட்டான். அந்தப் பொற்சிலையை வணங்காதவர்கள் எரிகிற அக்கினிசூளையிலே போடப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. பாபிலோனில் உள்ள யூதர்கள் அனைவரும் அந்தப் பொற்சிலையை வணங்கினார்கள். இந்த இடத்தில் தானியேல் இல்லை. ஆனால், தானியேலின் நண்பர்களாகிய அனனியா, மீஷாவேல், மற்றும் அசரியாவும் அந்த பொற்சிலையை வணங்கவில்லை. அப்பொழுது, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அந்த சிலையை வணங்குவதற்கு

இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தான். அப்பொழுது, *நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது* என்று முழங்கியதால் அக்கினி சூளையிலே எறியப்பட்டார்கள். ஆனால் எந்த சேதமுமின்றி தேவன் அவர்களைக் காப்பாற்றினார்.

## நேபுகாத்நேச்சாரின் மனமாற்றம்

அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டாலும், தங்கள் பெற்றோர்கள் கொடுத்த கல்வியின் காரணமாக அடிமைகளோடு அடிமையாக வாழாமல், தனித்துவத்தோடு வாழ்ந்த தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள்தான் விக்கிரகங்களை வணங்கிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் மனமாற்றத்திற்குக் காரணம். மனமாற்றத்திற்குப்பின் அவன் கொடுத்த சாட்சிதான் *தானியேல் 4*-ஆம் அதிகாரம் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரியு ராஜாவின் சாட்சி

அடிமையாக பாபிலோனுக்கு வந்த தானியேல் அதிபதியாக உள்ளதைக் கண்டு பொறாமை கொண்டவர்களின் சூழ்ச்சியால் 30 நாட்களாக ராஜாவாகிய தரியுவைத் தவிர வேறு யாரையும் வணங்கக்கூடாதென்ற உத்தரவு கையெழுத்தானது. இந்த உத்தரவை மீறுகிறவர்களை சிங்கக்கெபியில் போடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த உத்தரவு கையெழுத்தானதைக்குறித்து சற்றும் அஞ்சாத தானியேல் தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தரியு ராஜா தானியேலைக் காப்பாற்ற மனதாயிருந்தும், மாற்றப்படக்கூடாத உத்தரவினிமித்தம் தானியேலை சிங்கக்கெபியில் போடுவதற்கு உத்தரவிட்டான். இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் அதிகாலையில் எழுந்து சிங்கக்கெபியண்டை வந்து தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று கேட்டான். சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார் என்று தானியேல் கூறினான். பின்பு தானியேலைக் குற்றஞ்சாட்டின அனைவரும் தங்கள் குடும்பங்களோடே சிங்கக்கெபியில் போடப்பட்டார்கள். தானியேலின் தேவன் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்: அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும் என்று ராஜாவாகிய தரியு சாட்சி கூறினான். இப்படியாக தானியேலும் அவனுடைய நண்பர்களும் பாபிலோனில் எருசலேமின் கொடியை நாட்டினார்கள்.

**(தொடரும்...)**

*Published by Danny's Publications on behalf of:*

**God is Judge Ministries**

#389/1-2, First Floor, Bethel Home, Avarangadu,
Sanarpalayam, Tiruchengode - 637211.
8904072759 godisjudgeministries@gmail.com
/godisjudgeministries God is Judge Ministries